LIBRARY
03 AUG 2010
Eastern University, Sri Lanka.

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு பொது/சிறப்புக் கலைமாணித் தேர்வு 2008/2009 (யூன்/யூலை 2010)

## ECO/S 3201 பிரயோகப் பொருளியல்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**

---

01.(அ) “இலங்கை ஒரு விவசாய நாடாகக் காணப்படுகின்ற போதிலும் உணவுப் பொருட்களைக் கூட இறக்குமதி செய்ய வேண்டிய நிலையிலேயே உள்ளது.” இலங்கை விவசாயத்தில் தன்னிறைவடையாமைக்குரிய காரணங்களைப் பட்டியலிட்டு விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) “இலங்கையின் விவசாயத்துறையானது காலத்திற்குக் காலம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்துள்ளது.” தற்போதைய காலகட்டத்தில் இலங்கையின் உள்நாட்டு விவசாயத்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளங் கண்டு அவற்றினைச் சுருக்கமாக விளக்குக.

(13 புள்ளிகள்)

02.(அ) இலங்கைப் பொருளாதாரத்திற்கான பெருந்தோட்டத்துறையின் பங்களிப்பு குறைவடைந்துள்ள போதிலும் நாட்டிற்கு தற்போதும் அது கணிசமான பங்களிப்பினைச் செய்கின்றது. ஏற்றுக்கொள்கின்றீரா? உமது விடைக்கான காரணங்களை விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) “பெருந்தோட்டங்களைத் தனியார் மயப்படுத்தியமையால் நாட்டிற்குப் பல நன்மைகள் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.” நீர் இக்கூற்றறுடன் உடன்படுகின்றீரா? உமது விடையினை நியாயப்படுத்துக.

(13 புள்ளிகள்)

03.(அ) 1977இல் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் கைத்தொழில் துறையில் மறுமலர்ச்சி ஏற்பட்டதாக கூறப்படுகின்றது. கைத்தொழில் துறை வளர்ச்சியின் மூலம் நாட்டிற்கு ஏற்பட்ட நன்மைகளைப் பட்டியலிட்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) அபிவிருத்தியடைந்த நாடுகளின் அனுபவத்தின்படி கைத்தொழி துறை வளர்ச்சியானது நாட்டின் துரித அபிவிருத்திக் அத்தியாவசியமானதாகக் கருதப்படுகின்றது. ஏனைய துறைகளுட ஒப்பிடும்போது கைத்தொழில் துறை வளர்ச்சியின் மூலம் நாட்டிற்கு கிடைக்கக் கூடிய சாதகமான அமிசங்களை பட்டியலிட்டு சுருக்கமாக விளக்குக.

(15 புள்ளிகள்)

04.(அ) இலங்கையில் நிலவும் வேலையின்மைக்கான காரணங்கள் எவையெ அடையாளங்கண்டு அவற்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் வேலையின்மையைக் குறைத்து பொருளாதா வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கு கல்விக் கொள்கையில் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் எவையென நீர் கருதுகின்றீ உமது வாதத்தினை விரிவாக விளக்குக.

(15 புள்ளிகள்)

05. உமது அனுபவத்தின்படி இலங்கையில் நிலவும் வறுமைக்கா காரணங்களைப் பட்டியிட்டு, நாட்டில் வறுமையை இல்லாதொழிப்பதற்கு உம்மால் முன்வைக்கக்கூடிய நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை விளக்குக.

(25 புள்ளிகள்)

06. இலங்கையில் நீண்ட காலம் நிலவிய யுத்தம் முடிவுக்கு வந்துள்ளமையினால், நாட்டிற்கு பொருளாதார ரீதியாகக் கிடைக்க கூடிய அனுகூலங்களை அடையாளங்கண்டு விளக்குவதுடன் பொருளாதார ரீதியாக நாடு எதிர் நோக்கும் சவால்களையும் சுருக்கமாக விளக்குக.

(25 புள்ளிகள்)

*********